செய்தி வெளியீடு எண் : 2409 நாள் : 31.12.2022

<u>செய்தி வெளியீடு</u>

**மின் இணைப்பு எண்ணுடன், ஆதார் எண் இணைக்கும் பணி வருகிற 31.01.2023 வரை கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது – மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில் பாலாஜி அவர்கள் அறிவிப்பு.**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில் பாலாஜி அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பாக மின் இணைப்பு எண்ணை ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணி குறித்து தமிழ்நாடு மின்வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (31.12.2022) சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் காணொளி காட்சி மூலம் கலந்து கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு. இரா.மணிவண்ணன், அனைத்து இயக்குநர்கள் மற்றும் தலைமை அலுவலக உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மின் இணைப்பு எண்ணை ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணி தொடர்பான விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார். மேலும், அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் இப்பணிக் குறித்து தினந்தோறும் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்கக்கூடிய பணியினை மின் வாரியத்தின் மூலமாக தொடங்கப்பட்டு இன்று நண்பகல் 12 மணி வரை

ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய 2 கோடியே 67 இலட்சம் மின் இணைப்போடு இதுவரை ஒரு கோடியே 62 லட்சம் பேர் ஆதார் எண்ணை இணைத்திருக்கிறார்கள். 60.82 சதவீதம் மின் நுகர்வோர்கள் ஆதார் எண்ணை இணைத்திருக்கின்றார்கள். இதில் சிறப்பு முகாம்கள் வாயிலாக 87,91,000 இணைப்புதாரர்களும், ஆன்லைன் வாயிலாக 74,67,000 மின் இணைப்புதாரர்களும் ஆதார் எண்ணை இணைத்திருக்கிறார்கள். அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 77.53% நுகர்வோர்கள் மின் இணைப்போடு ஆதார் எண்ணை இணைத்துள்ளனர். குறைந்தப்பட்சமாக கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டத்தில் 51% நுகர்வோர்கள் மின் இணைப்போடு ஆதார் எண்ணை இணைத்துள்ளனர். இந்த மகத்தான பணிகளுக்கு மேலும் அவகாசம் வேண்டும் என்று இன்று நடந்த தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களும், அலுவலர்களும் கால நீட்டிப்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவருடைய அனுமதியைப் பெற்று வருகின்ற 31.01.2023 வரை மின் இணைப்பு எண்ணோடு ஆதாரை இணைக்கக்கூடிய பணிக்கு கால நீட்டிப்பு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மின் நுகர்வோர்களை அன்போடு நாங்கள் கேட்டுக்கொள்வது, ஜனவரி 31க்கு பிறகு மீண்டும் கால நீட்டிப்பு இருக்கும் என்ற நிலையில் இருந்து விடாமல் வருகின்ற ஜனவரி 31ஆம் தேதிக்குள் இருக்கக்கூடிய நாட்களை பயன்படுத்தி மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணிகளை நிறைவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தற்பொழுது, 2,811 பிரிவு அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, சிறப்பு முயற்சியாக 2,811 பிரிவு அலுவலகங்கள் வாயிலாக அந்தந்த பகுதிகளுக்கே நேரடியாக நடமாடும் சிறப்பு முகாம்கள் மூலமாக மக்களிடத்திலே ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தப்பட்டு மின் இணைப்பு எண்ணோடு ஆதார் எண்ணை இணைக்கக்கூடிய பணிகளை மேற்கொள்வதற்கு இன்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. நாளை ஆங்கில புத்தாண்டு என்பதால் மின் வாரியத்தில் நடைபெறுகின்ற சிறப்பு முகாம்கள் நாளை நடைபெறாது. நாளை மறுநாள் தொடங்கி ஜனவரி 31ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெற உள்ளது. எனவே, அதைப் பயன்படுத்தி

100% இணைப்பதற்கான முயற்சிகளை மின்வாரியம் எடுத்திருக்கிறது. கண்டிப்பாக இணைத்து முடிப்போம்.

விடுமுறை நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களில் சராசரியாக 3 முதல் 4 இலட்சம் மின் நுகர்வோர்கள் மின் இணைப்புகளுடன் ஆதார் எண்ணை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெயர் மாற்றம் செய்ய வேண்டியவர்கள் உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் 48 மணி நேரத்திற்குள்ளாக பெயர் மாற்றம் செய்து தரப்பட்டு வருகிறது. தற்பொழுது 60.82 சதவீதம் மின் இணைப்புகள் மட்டுமே ஆதார் எண்ணுடன் இணைத்துள்ளார்கள். மீதமுள்ள 39.18 சதவீத மின் இணைப்புகள் ஆதாருடன் இணைக்கப்பட்ட பின்பு ஒட்டுமொத்தமாக எவ்வளவு உரிமையாளர்கள் மின் இணைப்பைப் பயன்படுத்துகிறார்கள், எவ்வளவு வாடகை தாரர்கள் மின் இணைப்பை இணைத்துள்ளார்கள் என்ற தரவுகள் வெளியிடப்படும்.

மின் வாரியம் தொடர்ந்து கடுமையான முயற்சியின் மூலமாக 6,600 கோடி கிராமப்புற மின்மயமாக்க கழக நிறுவனத்திடம் (REC) கடனுக்கான வட்டியைக் குறைத்து, வருடத்திற்கு 84 கோடி வட்டியைக் குறைத்துள்ளோம். உலர் சாம்பல் மூலமாக மாதத்திற்கு 7 கோடி வருவாயாக இருந்தது தற்போது 13.71 கோடியாக விற்கப்படுகிறது. மின் வாரியம் தொடங்கிய நாளில் இருந்து 2021 வரை தமிழ்நாடு மின் வாரியத்தின் சொந்த நிறுவு திறன், தனியார் உட்பட 32,500 மெகாவாட் மட்டுமே தமிழகத்தின் மொத்த நிறுவு திறனாக உள்ளது. அடுத்தப் பத்தாண்டுக்குள் அதாவது, 2030க்குள் மொத்த நிறுவு திறன் தற்போது இருப்பதை விட இரு மடங்காக அதாவது 65,000 மெகாவாட்டாக உயர்த்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சில தொழிற்ச் சங்கங்கள் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. ஏற்கனவே, முதல் சுற்று பேச்சுவார்த்தை முடிந்ததின் அடிப்படையில் நிதி சார்ந்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டி இருப்பதால், நிதி துறையுடன் கலந்து ஆலோசித்து அதனடிப்படையில் அடுத்தக் கட்ட பேச்சுவார்த்தையை தொடங்கும் முன்னரே வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவறான முன் உதாரணம் ஆகும். எனவே, தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு உங்கள் மூலமாக கேட்டுக்கொள்வது என்னவெனில் பேச்சு வார்த்தையின் இறுதிக் கட்டத்தில் தாங்களின் கோரிக்கைகளை மின் வாரியம் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அடுத்தகட்ட

நடவடிக்கைகளை அவர்கள் தொடங்கட்டும். ஏற்கனவே, அகவிலைப்படி வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று அகவிலைப்படி வழங்கப்பட்டது. வரக்கூடிய நாட்களில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான முடிவுகளை எடுக்க மின் வாரியம் தயாராக உள்ளது.

விவசாயத்திற்கான 50,000 மின் இணைப்புகளைப் பொறுத்தவரை பொங்கலுக்கு முன்பாக முடிக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் விவசாயத்திற்கான 50,000 மின் இணைப்பு வழங்கும் சிறப்பாக திட்டத்தை தொடங்கி வைத்து ஒவ்வொரு நாளும் எவ்வளவு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை கேட்டறிந்து தினமும் கண்காணித்து வருகின்றார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று வரை 40,306 விவசாயிகளுக்கான மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 9,694 மின் இணைப்புகளுக்கான பணிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. பொங்கலுக்கு முன்பாக, கண்டிப்பாக 50,000 மின் இணைப்புகளும் வழங்கி நிறைவு செய்யப்படும். மின் நுகர்வோர்களிடம் பெறப்படும் ஆதார் போன்ற தனிப்பட்ட ஆவணங்கள் வெளியில் கசியாத வண்ணம் மின் வாரியம் பாதுகாப்பாக வைத்திருக்கும். என பேசினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தை ஆய்வு செய்தார்கள்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in